முருகப்பெருமான் துணை

**உலக ஞானத் தலைவன் முருகப்பெருமான் அருளிய அருள்வாக்கு**

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1653

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**08.04.2024,** திங்கட்கிழமை

1. பிரம்ம ரகசியம் கண்ட அரங்கா
பிரணவ சூட்சுமம் வென்ற அரசா
வரம்பல பெற்று என் சக்தியாகவே
வாழுகின்ற ஆறுமுக அரங்கா
2. அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் பங்குனி மாதம் 26 ம் நாள், 08.04.2024, திங்கட்கிழமை)
வரமென அரங்கன் கரம்பட
வையகத்தார் பெறும் தீட்சையெல்லாம்
3. சரவணப்பெருமான் யான் தருகின்ற தீட்சையே
சகலரும் அரங்கனை நாடி வந்து
தொடர்ந்து தீட்சை ஏற்று
அரங்கன் தர்மத்தின் வழி பங்களிப்பு செய்து
4. வரமென அரங்கன் சேவையை
வையகமெங்கும் எடுத்துச்சென்றால்
சென்றிட இந்த பேருலகமெல்லாம்
சித்தியாக சுப்ரமணியப்பெருமான் யானும் இறங்கி
5. இத்தரையில் அற்புதத்தை நடத்துவேன்
இனிதே அரங்கன் அவதார நோக்கமாக
ஆகவே உலகமெங்கும்
ஞானவான்கள் படையை நிரப்பி
6. உலகினில் ஞான யுகமாற்றம் செய்து
உத்தமமாய் ஞானிகள் ஆட்சியையும்
ஞானவான்கள் ஆட்சியையும்
ஞான ஆட்சியுமாக ஆறுமுகன் யான் கலியினில் நடத்துவேன்

7. அன்னதனால் அகிலத்தார் அரங்கனை நோக்கி தொடர்ந்து வர
ஆற்றல்பட அரங்கன் அவதாரத்தின் வழி
இந்த அற்புதத்தை அகிலத்தார் அனைவரும் கண்டு மகிழ நேரும்
அகிலமெங்கும் ஞான ஆட்சி உதயமாகக்கூடும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–